
**மார்ச் – 03**

# TNPSC துளிகள்

- ❖ கொல்கத்தா விமான நிலையத்திற்கு அடுத்தபடியாக மலிவு விலையில் சிற்றுண்டி உணவுகளை வழங்குவதற்காக சென்னை விமான நிலையத்தில் UDAN யாத்ரி கஃபே எனும் சிற்றுண்டியகமானது திறக்கப்பட்டுள்ளது.
- ❖ சென்னை இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழக நிறுவனத்தில் IInvenTiv2025 எனப் படும் இரண்டு நாட்கள் அளவிலான தேசிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு கண்காட்சி ஆனது நடைபெற்றது.
- ❖ டாக்டர் S.பாலச்சந்திரனுக்குப் பதிலாக சென்னை வானிலை மையத்தின் புதியத் தலைவராக டாக்டர் B. அமுதா நியமிக்கப்பட்டுள்ளார்.
  - இவ்வகையில் சென்னை வானிலை மையமானது முதல்முறையாக ஒரு பெண் தலைமையை ஏற்றுக் கொண்டு இருக்கும்.
- ❖ கன்னட எழுத்தாளர் பானு முஷ்டாக் என்பவரின் Heart Lamp எனப்படும் கதைத் தொகுப்பு ஆனது, இந்த ஆண்டு சர்வதேசப் புக்கர் பரிசிற்கான தகுதிப் பட்டியலில் இடம் பெற்றுள்ள 13 புத்தகங்களில் ஒன்றாக இடம் பெற்றுள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## சென்னை மாநகராட்சி மண்டலங்கள்




- ❖ பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 ஆக உள்ள மாநகர நிர்வாக மண்டலங்களின் எண்ணிக்கையை 20 ஆக உயர்த்த தமிழக மாநில அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.
- ❖ மக்கள்தொகை அடிப்படையில் வளங்களை சமமாக விநியோகிப்பதையும் அரசுச் சேவைகளை திறன்மிகு முறையில் வழங்குவதையும் இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- ❖ 42 உள்ளாட்சி அமைப்புகளை இணைத்ததன் மூலம் GCC ஆனது 2011 ஆம் ஆண்டில்

விரிவுபடுத்தப்பட்டதன் மூலம் அதன் புவியியல் எல்லைகள் 426 சதுர கிலோமீட்டராக விரிவடைந்துள்ளது.

- 2011 ஆம் ஆண்டில், சென்னையின் மக்கள் தொகை 66.72 லட்சமாக இருந்த நிலையில், தற்போது அது சுமார் 85 லட்சமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- தற்போது, சென்னை மாநகரம் ஆனது 15 மண்டலங்களாகவும் 200 வார்டுகளாகவும் பிரிக்கப் பட்டுள்ளது.

## HPWMI நபர்களுக்கான புதியக் கொள்கை – தமிழ்நாடு




- மனநலம் பாதிக்கப்பட்ட ஆதரவற்ற நபர்களின் பராமரிப்பு மற்றும் அமலாக்கக் கட்டமைப்புக்கான 2024 ஆம் ஆண்டிற்கான மாநிலக் கொள்கையை முதலமைச்சர் வெளியிட்டு ள்ளார்.
- மனநலம் பாதிக்கப்பட்ட ஆதரவற்ற / சில வீடற்ற நபர்களுக்கு (HPWMI) வழங்கப்படும் சேவையை மீட்பு மற்றும் தீவிர நலப் பராமரிப்பு, இடைநிலை பராமரிப்பு, நீண்ட கால பராமரிப்பு மற்றும் சமூக ஒருங்கிணைப்பு ஆகிய நான்கு நிலைகளாக இக்கொள்கை வரையறுக்கிறது.
- மீட்பு நடவடிக்கைகளில் பின்பற்ற வேண்டிய ஒரு சீர்தர இயக்க நடைமுறையை (SOP) இந்தக் கொள்கை முன்மொழிகிறது.
- அத்தகைய நபர் 18 வயதுக்குட்பட்டவராக இருந்தாலோ, பெண் அல்லது கர்ப்பிணி மற்றும் ஏதேனும் குற்றத்தினால் பாதிக்கப்பட்டவராக இருந்தால் என்ன என்ன செய்ய வேண்டும் என்பதையும் இந்தக் கொள்கை விவரிக்கிறது.
- மாநில மனநல ஆணையத்தின் (SMHA) தலைமை நிர்வாக அதிகாரி, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை இணைக்க செய்வதற்கான அரசு முதன்மை அதிகாரியாக செயல்படுவார்.
- மனநலம் பாதிக்கப்பட்ட வீடற்ற நபர்களை மீட்பதற்காக நியமிக்கப்பட்ட ஒரு உதவி எண்ணாக 102 செயல்படும்.

# தேசியச் செய்திகள்


## ஒரு நாடு - ஒரு துறைமுக செயல்முறை

- மத்திய அரசு ஆனது, சமீபத்தில் 'ஒரு நாடு, ஒரு துறைமுகச் செயல்முறை' என்ற ஒரு முன்னெடுப்பினை அறிமுகப்படுத்தியுள்ளது.

- ❖ திறமையின்மை, அதிகரித்தச் செலவினங்கள் மற்றும் செயல்பாட்டு தாமதங்களுக்கு வழி வகுக்கும் ஆவணமாக்கல் மற்றும் செயல்முறைகளில் உள்ள முரண்பாடுகளை நீக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இது இந்தியாவின் முக்கியத் துறைமுகங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு செயல்பாடுகளைத் தரமுறைப்படுத்தவும் நெறிமுறைப்படுத்துவதற்குமான முயற்சி ஆகும்.
- ❖ முதல் கட்டமானது குடியேற்றம், துறைமுக சுகாதாரக் கட்டமைப்பு மற்றும் துறைமுக அதிகாரிகள் குறித்த தரப்படுத்தப்பட்ட ஆவணமாக்கல் ஆகும்.




## UGC நடுநிலைமைக்கான வழிகாட்டுதல்கள்




- ❖ பல்கலைக்கழக மானியக் குழு (UGC) ஆனது, உயர்கல்வியில் பெரும் சமத்துவத்தினை மேம்படுத்துவதற்காகப் திருத்தப்பட்ட வரைவு வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.
- ❖ இதில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கட்டாயமாக மேற்கொள்ள வேண்டிய சில முயற்சிகள், சம வாய்ப்பு மையங்கள், சமத்துவக் குழுக்களில் பெண்கள் மற்றும் SC/ST சமூகங்களின் பிரதிநிதித்துவம் மற்றும் பாகுபாடு காட்டப்படும் சூழல்களில் மிகவும் விரைவான எதிர் நடவடிக்கை ஆகியவை அடங்கும்.
- ❖ வழிகாட்டுதல்களுக்கு இணங்காத நிலையில் சில கடுமையான தண்டனைகளையும், மேலும் சில சூழல்களில் அங்கீகாரத்தினை ரத்து செய்ய வேண்டும் என்றும் இந்த வழி

காட்டுதல்கள் குறிப்பிடுகின்றன.

- ❖ ஒரு நிறுவனத்தின் தலைவரால் நியமிக்கப்பட்ட ஒரு சமத்துவக் குழுவானது, மத்திய அரசின் செயல்பாடுகளை நிர்வகிப்பதோடு, பாகுபாடு குறித்த புகார்களை விசாரித்து நிவர்த்தி செய்யும்.
- ❖ இக்குழுவில் குறைந்தபட்சம் SC மற்றும் ST பிரிவுகளைச் சேர்ந்த ஒரு பெண் மற்றும் ஒரு உறுப்பினர் இருக்க வேண்டும்.

## ஆதார் நல்லாட்சி இணைய தளம்


- ❖ மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம் (MeitY) ஆனது, ஆதார் நல்லாட்சி இணைய தளத்தினைத் தொடங்கியுள்ளது.
- ❖ இது ஆதார் அங்கீகார கோரிக்கைகளுக்கான ஒரு ஒப்புதல் செயல்முறையை நெறிப் படுத்துகிறது.
- ❖ இது அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் ஆதார் அங்கீகார கோரிக்கைகளுக்கான ஒப்புதல் செயல்முறையை எளிதாக்குகிறது.
- ❖ இது அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள், பொது நலன் சேவைகளுக்காக ஆதார் அங்கீகாரத்தினைப் பெற வழி வகுக்கிறது.




## மாநிலங்களின் நிலை குறித்த அறிக்கை - AAD 2025

- ❖ இந்தியாவானது ஐக்கிய நாடுகள் சபையினால் வலியுறுத்தப்பட்ட 16 நிலையான மேம்பாட்டு இலக்குகளுள் (SDGs) ஒன்பது இலக்குகளில் பின்தங்கியுள்ளது.
- ❖ 36 இந்திய மாநிலங்களும் ஒன்றியப் பிரதேசங்களும் (UTs) இந்த 15 SDG இலக்குகளில் நான்கில் மட்டுமே, இலக்கின் பூர்த்தி நிலையில் குறைந்தது பாதியளவை அடைந்து உள்ளன.
- ❖ உத்தரகாண்ட் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் மிகக் குறைவான பின்தங்கிய குறிகாட்டிகளைக் கொண்டிருந்தாலும், அவை ஒவ்வொன்றிலும் ஆறு குறிகாட்டிகளில் ஒன்றில் சவால்கள் நீடிக்கின்றன.

- உத்தரப் பிரதேசம், குஜராத், மேற்கு வங்காளம், மத்தியப் பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் உள்ளிட்ட பதினாறு மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள், அவற்றின் 30-43 சதவீத SDG குறிகாட்டிகளில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் பாதிக்கும் குறைவாகவே எட்டியுள்ளன.
- இந்த ஒரு அறிக்கையானது 2025 ஆம் ஆண்டிற்கான அனில் அகர்வால் பேச்சுவார்த்தை என்பதின் போது வெளியிடப் பட்டது




# சர்வதேசச் செய்திகள்

## தங்க நிற அட்டை குடியேற்றத் திட்டம்




- அமெரிக்காவில் நிரந்தர வசிப்பிடத்தினை நாடும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு "தங்க நிற அட்டை" என்ற நுழைவு இசைவுத் திட்டத்தினை அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவித்துள்ளார்.
- தங்க நிற அட்டையின் மதிப்பு சுமார் 5 மில்லியன் டாலராக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- இது பச்சை நிற அட்டையின் சலுகைகளையும் வழங்குகிறது என்பதோடு (அமெரிக்க) குடியுரிமை பெறுவதற்கான பாதையாகவும் உள்ளது.

- 1990 ஆம் ஆண்டு காங்கிரஸால் உருவாக்கப்பட்ட EB-5 திட்டம் ஆனது, அமெரிக்கக் குடியுரிமை மற்றும் குடியேற்றச் சேவைகள் (USCIS) என்ற அமைப்பினால் நிர்வகிக்கப் படுகிறது.
- இது அமெரிக்க நாட்டு வணிகங்களில் முதலீடு செய்யும் வெளிநாட்டினருக்கு நிரந்தர வசிப்பிட (பச்சை நிற அட்டை) வாய்ப்பினை வழங்குகிறது.
- இதில் முதலீட்டாளர்கள் குறைந்தபட்சம் 1.05 மில்லியன் டாலர் (சில குறிப்பிட்ட சூழலில் 800,000 டாலர்) முதலீடு செய்ய வேண்டும் என்பதோடு அமெரிக்கர்களுக்கு குறைந்தது 10 வேலைவாய்ப்புகளை வழங்க வேண்டும்.

## நீல நிற நுழைவு இசைவுச் சீட்டு - ஐக்கிய அரபு அமீரகம்


- சுற்றுச்சூழல் வளங்காப்பு மற்றும் நிலைத் தன்மைக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்த தனிநபர்களை இலக்காகக் கொண்ட 10 ஆண்டு கால ஒரு வசிப்பிட அனுமதி வழங்கீட்டிற்கான ஒரு நீல நிற நுழைவு இசைவுச் சீட்டினை ஐக்கிய அரபு அமீரகம் அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது, சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக என்று தனது சேவையினை அர்ப்பணித்த உலகளாவியத் திறமையாளர்களை ஈர்த்து தக்க வைத்துக் கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தங்க நிறம் மற்றும் பச்சை நிற நுழைவு இசைவுச் சீட்டுகள் போன்ற ஐக்கிய அரபு அமீரகத்தின் தற்போதைய வசிப்பிடத் திட்டங்களுடன் கூடுதலாக நீல நிற நுழைவு இசைவுச் சீட்டு அறிமுகப்படுத்தப் படுகிறது.




## மூன்று தொடர் வெப்பமண்டலப் புயல்கள்


- ஐந்து நாட்களுக்குள் ரே, செரு மற்றும் ஆல்ஃபிரட் என பெயரிடப்பட்ட சில புயல்கள் உருவாகி தற்போது பசிபிக் பெருங்கடலில் சுழன்று கொண்டிருக்கின்றன.
- தெற்கு பசிபிக் பகுதியில் இதற்கு முன்னதாக 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஒரே நேரத்தில் மூன்று வெப்பமண்டலப் புயல்கள் உருவாகின.
- அப்போது ஏற்பட்ட லூகாஸ், அனா மற்றும் பினா புயல்கள் ஒரே நேரத்தில் செயலில்

இருந்தன.



# பொருளாதாரச் செய்திகள்

## 2026 ஆம் ஆண்டு முதல் மத்திய வரிகளின் பங்கு





- இந்திய அரசாங்கம் ஆனது மத்திய வரி வருவாயில் மாநிலங்களுக்கு வழங்கப்படும் பங்கினைக் குறைக்க திட்டமிட்டு வருகிறது.
- இந்திய நிதி ஆணையம் ஆனது, மத்திய-மாநில நிதி உறவுகளின் பிற அம்சங்களுடன் சேர்த்து, வரிப் பகிர்வு குறித்தும் பரிந்துரைகளை வழங்குகிறது.
- அரவிந்த் பனகாரியா தலைமையிலான ஒரு குழு ஆனது, அக்டோபர் 31 ஆம் தேதிக்குள் தனது பரிந்துரையைச் சமர்ப்பிக்கும் என்பதோடு இது 2026-27 ஆம் நிதியாண்டிலிருந்து செயல்படுத்தப்படுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தற்போது 41% ஆக உள்ள மாநிலங்களுக்கு வழங்கப்படும் வரி வருவாயின் பங்கைக் குறைந்தது 40% ஆகக் குறைக்க மத்திய அரசு பரிந்துரைக்க வாய்ப்புள்ளது.
- வரி வருவாயில் மாநிலங்களின் பங்கில் 1% குறைப்பானது, மத்திய அரசுக்குச் சுமார் 3,500 கோடி ரூபாயை ஈட்டக்கூடும்.
- 1980 ஆம் ஆண்டில் 20% ஆக இருந்த மாநில அரசுகளுக்கு வழங்கப்படும் வரிகளின்

பங்கு ஆனது தற்போது 41% ஆக அதிகரித்துள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## சீனாவின் கடைசியாக எஞ்சியுள்ள காட்டு முதலைகள்


- சீனாவின் டிராகன் இனத்தின் உருவ அமைப்பிற்கு பயன்படுத்தப்படும் சிறிய முதலை இனமான சீன முதலை (அலிகேட்டர் சினென்சிஸ்) ஆனது மிகவும் கடுமையான அளவு அச்சுறுத்தல்களை எதிர் கொண்டு வருகிறது.
- சீன முதலை ஆனது, கிழக்கு சீனாவில் உள்ள நன்னீர் ஈரநிலங்களில் மட்டுமே காணப் படுகிறது.
- அவை முன்னர் மத்திய-கீழ் மட்ட யாங்சே மற்றும் மஞ்சள் நதிப் படுகைகளில் காணப் பட்டன.
- இன்று 200 காட்டு சீன முதலைகள் மட்டுமே காணப்படுகின்றன.




## இந்தியாவின் அதிக கழுகு எண்ணிக்கை

- சமீபத்தியக் கணக்கெடுப்பின் படி மத்தியப் பிரதேசத்தில் காணப்படும் கழுகுகளின் எண்ணிக்கை 12,981 ஆகக் கணக்கிடப்பட்டுள்ளது என்பதோடு இது கடந்த காலக் கணக்கெடுப்பை விட 2,136 அதிகரித்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டு கணக்கெடுப்பில், அம்மாநிலத்தில் உள்ள கழுகுகளின் எண்ணிக்கை 10,845 ஆகக் கணக்கிடப்பட்டது.
- கடந்த ஆறு ஆண்டுகளில், அம்மாநிலத்தில் உள்ள பறவை இனங்களின் எண்ணிக்கை 35 சதவீதம் அதிகரித்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டில், மத்தியப் பிரதேசத்தில் 8,397 கழுகுகள் இருந்தன, அதன் பின்னர் கழுகுகளின் எண்ணிக்கை சீராக அதிகரித்து வருகிறது.
- 2021 ஆம் ஆண்டில், அந்த மாநிலத்தில் உள்ள கழுகுகளின் எண்ணிக்கை 9,446 ஆக இருந்தது.

- சமீபத்தியக் கணக்கெடுப்பின்படி, மத்தியப் பிரதேசத்தில் ஏழு வகையான கழுகுகள் உள்ளன.
- அவற்றில் நான்கு உள்நாட்டு இனங்கள் மற்றும் மீதமுள்ள மூன்று இனங்கள் வலசை வருபவையாகும்.




## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### பிராணி மித்ரா மற்றும் ஜீவ் தயா விருது 2025




- "பிராணி மித்ரா மற்றும் ஜீவ் தயா விருது விழா" என்ற விருதானது இந்திய விலங்கு நல வாரியத்தினால் (AWBI) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இந்த ஆண்டு "பிரானி மித்ரா விருதுகள்" ஆனது ஐந்து பிரிவுகளின் கீழ் 5 தனிநபர்கள் / அமைப்புகளுக்கு வழங்கப்பட்டன:
- 1960 ஆம் ஆண்டு விலங்குகள் மீதான வன்கொடுமை தடுப்பு (PCA) சட்டத்தின் கீழ் AWBI நிறுவப்பட்டுள்ளது.

- விலங்குகளைத் தேவையற்ற வலிகள் அல்லது துன்பத்திற்கு ஆளாக்காமல் இருப்பதை உறுதி செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.


# முக்கிய தினங்கள்

## பாகுபாடு ஒழிப்பு தினம் - மார்ச் 01

- இந்த வருடாந்திர அனுசரிப்பு ஆனது பல்வேறு வடிவங்களில் உள்ள சில பாகுபாடுகள் குறித்து வெளிக்கொணரச் செய்வதோடு, மிகவும் ஒரு நியாயமான மற்றும் சமமான சமூகத்தினை ஊக்குவிக்கிறது.
- பாகுபாடு ஒழிப்புப் பிரச்சாரம் ஆனது, 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் UNAIDS அமைப்பினால் தொடங்கப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "We stand together" என்பதாகும்.




## உலக குடிமைப் பாதுகாப்பு தினம் - மார்ச் 01




- இது குடிமைப் பாதுகாப்பு உத்திகள் மற்றும் மக்களின் பாதுகாப்பு குறித்த விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சர்வதேச குடிமைப் பாதுகாப்பு அமைப்பின் ஒன்பதாவது பொதுச் சபை ஆனது 1990


ஆம் ஆண்டில் இத்தினத்தினை நியமித்தது.

- சர்வதேச குடிமைப் பாதுகாப்பு அமைப்பு ஆனது 1931 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இது 61 உறுப்பினர் நாடுகள், 16 பார்வையாளர் நாடுகள் மற்றும் சுமார் 23 இணை உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

# இதரச் செய்திகள்

## இந்தியப் பெருந்தகைமை குறித்த அறிக்கை 2025

- சமூகத் துறை நிதியளிப்பு ஆனது கடந்த ஐந்து ஆண்டுகளில் சுமார் 13% அதிகரித்து 2024 ஆம் நிதியாண்டில் 25 லட்சம் கோடி ரூபாயை எட்டியுள்ளது.
- சமூகத் துறையளிப்பு ஆனது 2029 ஆம் நிதியாண்டில் 45 லட்சம் கோடி ரூபாயை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- நிதி ஆயோக் அமைப்பானது, இத்துறைக்குச் சுமார் 14 லட்சம் கோடி ரூபாய் நிதிப் பற்றாக்குறை இருப்பதாக மதிப்பிட்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டின் பெரு அறிக்கையின் படி, இந்த நிதி இடைவெளி ஆனது 2029 ஆம் நிதி ஆண்டில் 16 லட்சம் கோடி ரூபாயாக அதிகரிக்கும்.
- இதில் சமூகச் செலவினங்களானது, மொத்த நிதியில் சுமார் 95% பங்கினைக் கொண்ட பொதுத் துறையால் பெரும்பாலும் வழங்கப்படுகின்றன.
- பொதுத்துறை நிதியளிப்பு ஆனது, 2024 ஆம் நிதியாண்டில் 23 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது என்பதோடு இது அடுத்த ஐந்து ஆண்டுகளில் 43 லட்சம் கோடி ரூபாயை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பொதுத்துறையின் செலவினம் ஆனது 2024 ஆம் நிதி ஆண்டில் 7.9% ஆக இருந்தது. இது 2019 ஆம் நிதியாண்டில் 6.8% ஆக இருந்தது.
- 2024 ஆம் நிதியாண்டில், தனியார் செலவினமானது சுமார் 1.31 லட்சம் கோடி ரூபாயை எட்டியது என்ற நிலையில் இது 2023 ஆம் நிதியாண்டில் இருந்ததை விட வெறும் 7% அதிகமாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★